நாள்.11.03.2026

இ.ம. எண் 7/24 இன் அசல் வழக்கு எண். 28/2022

ம. சா.1

பெயர். கவிதா மேரி

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

அசல் வழக்கில் வழக்குரையை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இடைகால மனு எண் 3/22 மனுவையும் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். பிராது மற்றும் மேற்படி மனுவில் அலெக்ஸ் முத்துராஜா மகள் என என்னை நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை திருத்தம் செய்ய குறுக்குவிசாரணை நிறுத்தப்பட்டது என்றால் சரிதான். இந்த மனுவான 7/24 ல் அலெக்ஸ் முத்துராஜா மனைவி கவிதாமேரி என என்னை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

இடையீட்டு மனு எண் 3/22 தாக்கல் செய்யப்பட்டு ஐந்து மாதங்கள் கழித்து தான் அதில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் Status quo பிறப்பித்த பிறகு எதிர்மனுதாரர் கட்டுமானம் கட்டியதாக இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஆனால் வழக்கு தாக்கல் செய்யும் போதே என்னுடைய வழக்குரையில் ஐந்தாம் பக்கத்தில் பிரதிவாதி காம்பவுண்ட் சுவர் கட்டியதாகவும் நான் நாமக்கல் சென்று வந்த போது அதை பார்த்து அகற்ற கூறியதாகவும் பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எதிர்மனுதாரரிடம் நான்கு சக்கர வாகனம் உண்டு என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை 2 ம் தபசில் சொத்தில் அவர் நிறுத்தி வைப்பார் என்றால் சரியல்ல, அவர் வீட்டிற்கு முன்பு நிறுத்தி வைப்பார். எதிர்மனுதாரர் வீட்டின் முன்பு உள்ள தெரு 10 அடி அகலம் இருக்கும் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் வீட்டிற்கு மேல்பக்கமும் கீழ்ப்பக்கமும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான், மேல்பக்கம் வழக்கின் 2 ம் தபசில் சொத்து உள்ளது அதற்கு மேல்பக்கம் வீடுகள் தொடர்ச்சியாக உள்ளது. அந்த தெரு வழியாக வாகனங்கள் சென்று வரும் என்றால் சரிதான்.

வழக்கு தாக்கல் செய்து 2 ½ வருடம் கழித்து தான் நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். Status quo உத்தரவு பிறப்பித்த பிறகு வழக்கு சொத்தின் தென்மேற்கு பகுதியில் சுவர் வைத்து அதற்கு மேற்கு பக்கம் ஆகாஸ் என்பவர் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி தென்மேற்கு சுவர் நானும் ஆகாஸ் என்பவரும் சேர்ந்து பொதுசுவராக கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல,

எதிர்மனுதாரரும் ஆகாஸ் என்பவரும் சேர்ந்து கட்டினார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எதிர்மனுதாரர் வழக்கு 2 ம் தபசில் சொத்தில் கார் நிறுத்துவதற்காக தகர செட் அமைத்திருந்தார் என்றாலும் ஆணையர் பார்வையிட்ட சமயத்திலும் கார் பழுது பார்ப்பதற்காக எடுத்து செல்லப்பட்டிருந்து என்றாலும் சரியல்ல.

வழக்கு சொத்தில் எதிர்மனுதாரர் தற்போது கட்டியதாக சொல்லும் சுவர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே கட்டப்பட்டது என்றாலும் வழக்குரையில் அதை நான் ஒத்துக்கொண்டு தற்போது ஆகாஸ் என்பவரும் நானும் நீதிமன்ற உத்தரவிற்கு முரணாக சுவர் கட்டியதை எதிர்மனுதாரர் ஆட்சேபனை செய்ததால் பொய்யான சங்கதிகளுடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் ஏற்படுத்தியது பொய்யான புகார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்களும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இருந்த கட்டுமானங்களை காட்டும் புகைப்படங்கள் என்றால் சரியல்ல.

இந்த மனுவில் நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய மனு செய்வதற்கு தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். அவ்வாறு நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டால் நானும் ஆகாஸ் என்பவரும் சேர்ந்து வழக்கு தபசில் சுவர் கட்டியது தெரிந்துவிடும் என்பதால் நான் இதுவரை ஆணையர் நியமனம் கேட்டு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் நீதிமன்ற உத்தரவையும் மீறவில்லை என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.